இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் குறிப்பிட்டுள்ள சகல விபரங்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதி செய்கின்றேன். இதில் குறிப்பிட்டுள்ள எந்தத் தகவலையும் இதன் பின்னர் நான் திருத்தியமைக்கமாட்டேன். இதில் உள்ளடங்கும் விடயங்கள் ஏதேனும் உண்மைக்கு முரணானவை என சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் நான் இச்சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கு தகுதியற்றவராவேன் என்பதையும், சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் தெரியவரும் பட்சத்தில் எந்தவொரு நட்டஈடும் இன்றி பதவி நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல் :

இங்கு கையொப்பமிட்டுள்ள ....................................... எனும் முகவரியில் வசிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............... ............................. என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், அவர் தனது கையொப்பத்தை .................. ................ ஆந் திகதி என் முன்னிலையில் வைத்தார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

17. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல் :
(தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)

இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற திரு./ திருமதி/ செல்வி ............................. ..................... என்பவர் தற்போது ............................................ ........ பதவியில் சேவையாற்றி வருகின்றார் என்றும், அவரின் வேலைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானவை என்றும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்றும், அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிப்பதில்லை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

4-964

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

### சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2015

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவில் பணியாற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை இந்த அமைச்சு சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். கீழ்க்குறிப்பிடப்படும் அறிவித்தலுக்கமைய அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. பரீட்சை நடைமுறை :**

(அ) இப்பரீட்சை 3 வினாத்தாள்களைக் கொண்டதாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாத்தாளுக்குமான பாடவிதானம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது ;

(ஆ) வினாத்தாள் 1 முதல் 3 வரை ஒரு வினாத்தாளுக்கு 100 புள்ளிகள் வழங்கப்படுவதுடன் சித்தியடைவதற்கு ஒரு வினாத்தாளில் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(இ) இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது ;

(ஈ) ஆங்கில மொழிக்குரிய எழுத்துமூலப் பரீட்சையின் 75 புள்ளிகளில் 30 புள்ளிகளும் வாய்மூலப் பரீட்சையின் 25 புள்ளிகளில் 10 புள்ளிகளும் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும் ;

(உ) இப்பரீட்சைக்குரிய 3 வினாத்தாள்களுக்கும் ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் தோற்றி சித்தியடைய முடியும். ஒரு தடவையில் ஆங்கில எழுத்துமூலப் பரீட்சை அல்லது வாய்மூலப் பரீட்சையின்போது அவற்றில் ஒரு பரீட்சையில் மாத்திரம் சித்தியடைந்தால், சித்தியடையாத பாடத்திற்கு மாத்திரம் அடுத்த முறை நடைபெறும் பரீட்சையின்போது விண்ணப்பிக்க முடியும் ;

(ஊ) ***பரீட்சைக் கட்டணம்.***- முதலாவது அமர்வாக முழுப்பரீட்சைக்கு அல்லது ஒரு பகுதிக்கு மாத்திரம் தோற்றும்போது பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படும். முதலாவது அமர்வு அல்லாதவிடத்து கீழ்க்குறிப்பிடப்படும் பிரகாரம் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும் :

| | |
|---|---|
| முழுப் பரீட்சைக்கு | 500 ரூபா |
| ஒரு பாடத்திற்கு | 200 ரூபா |

பரீட்சைக் கட்டணம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவுவைத்து நாட்டின் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும்/ உப அஞ்சல் அலுவலகத்திலும் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அதன் ஒரு ஓரத்தை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப்படவோ அல்லது வேறோர் பரீட்சைக்கு மாற்றப்படவோ இடமளிக்கப்பட மாட்டாது.

3. **வினாத்தாள் மற்றும் அவற்றுக்கான பாடவிதானம் :**

**முதலாவது வினாத்தாள்**
**(காலம் : 3 மணித்தியாலங்கள்)**

(I) ***நிதிப்பிரமாணங்கள்.***- (பாட இலக்கம் - 01) :

(i) திரட்டு நிதியம்
(ii) வரவு செலவுத்திட்ட வகைப்படுத்தல் பிரிவு
(iii) மீண்டுவரும் செலவினம்/ மூலதனச் செலவினம்
(iv) வீரமொங் நடைமுறை
(v) பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் மேற்பார்வை
(vi) கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் அரச வருமானம் சம்பந்தமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள்
(vii) பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள்
(viii) அரச வருமானம் சம்பந்தமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்
(ix) திறைசேரி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு
(x) திணைக்களமொன்று என்ற வகையில் திறைசேரியின் நிறைவேற்று அலுவல்கள்
(xi) உள்ளகக் கணக்காய்வு
(xii) நிதிக் கட்டுப்பாடு சம்பந்தமான அலுவல்களை ஒப்படைத்தல் (அ. செலவு, ஆ. வருமானம்)
(xiii) கணக்காய்வு அறிக்கை
(xiv) செலுத்துதல் நடைமுறை
(xv) கணக்கெடுப்பு சபை
(xvi) வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் சம்பந்தமான நடைமுறைகள்

**இரண்டாவது வினாத்தாள்**
**(காலம் : 3 மணித்தியாலங்கள்)**

(II) தாபன மற்றும் அலுவலக நடைமுறைகள் (பாட இலக்கம் - 02).- தாபனக்கோவையின் I ஆவது பிரிவில் I, II, III, IV, VI, VII, VIII, XII, XIV, XV, XXII, XXIV, XXV, XXVII ஆம் அத்தியாயங்கள். மற்றும் II ஆவது பிரிவில் XLVII ஆம் அத்தியாயம் மற்றும் அலுவலக நடைமுறைகள் மற்றும் வெளிக்கள அமைப்பு நடைமுறைகள் சம்பந்தமான அறிவைப் பரீட்சிக்கும் வினாத்தாளாகும்.

**மூன்றாவது வினாத்தாள்**
**(காலம் : 3 மணித்தியாலங்கள்)**

(III) ஆங்கிலம் (பாட இலக்கம் - 03)
(அ) எழுத்துமூலப் பரீட்சை
(ஆ) வாய்மூலப் பரீட்சை

***(1) Content***
***Written Examination (3 hours)***

(a) Grammar : The following areas will be tested :

(I) The Verb Forms of all Principal tenses of English eg. The Present Simple Tense, The Simple Past, The Present Perfect, etc.
(II) Nouns, Countable, Uncountable
(III) Pronouns
(IV) Adjectives Degrees of Comparison
(V) Adverbs of Frequency, Word order, Phrases
(VI) Prepositions
(VII) Determiners
(VIII) Question words
(IX) Model Auxiliaries, Can, Could, May, Might, Should, Must, Ought
(X) The Definite Article
(XI) Cardinals/Ordinals
(XII) The Passive Construction
(XIII) Relative Clauses
(XIV) If Clauses
(XV) Reported Speech
(XVI) There is/There are
(XVII) Have/Has

(b) Vocabulary tested will be that of General Modern English with special emphasis on the following field of Management Administration and Social and Economic Development.

(c) Writing - Ability to write Essays, Department Reports, Official Letters

Oral Examination (15 minutes)

a. Speech
b. Listening Comprehension
c. Reading

*(2) Scheme to Examination*

(1) Written examination - There will be one paper of 3 hrs duration (75% Marks)

(2) Oral examination - 15 Minutes duration (25% Marks)

4. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப் படிவத்தை ஏ4 அளவிலான தாளில் இரு பக்கத்தையும் பயன்படுத்தி தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் இல. 1 முதல் 3 வரையிலான பகுதிகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வகையிலும் மீதிப்பகுதிகள் இரண்டாம் பக்கத்தில் உள்ளடங்கும் வகையிலும் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். தமது கையெழுத்தினாலேயே அவற்றுக்கான தகவல்களை தெளிவாக பூரணப்படுத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியை வைத்திருத்தல் பயனுடையதாக இருக்கும். மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். அவ்வா றில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத் திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும்.

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை பதிவுத் தபாலில் 2016.05.20 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

(இ) விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2015" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை வைத்திருத்தல் பயனுடையதாக இருக்கும்.

(ஈ) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப் பட்டவுடனே அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவித்தல் விடுக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்தது 5 தினங் களுக்கு முன்னர் தமது அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அது சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையுடன் தொடர்புகொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தொடர்புகொள்ளும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வாழ்பவராயின், குறிப்பிட்ட விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பிவைத்தல் பயன்மிக்கதாக இருக்கும். அவ்வாறு தொடர்புகொண்டு வினவும்போது பரீட்சைத் திணைக்களம் வேண்டிநிற்கும் ஏதேனும் தகவல்களை உறுதிசெய்வதற்காக தம்மிடமிருக்கும் விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் அந்தப் பற்றுச்சீட்டின் பிரதி, பதிவுத்தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயாராக வைத்திருத்தல் பயன்தரக்கூடியதாக இருக்கும்.

5. **பரீட்சைக்குத் தோற்றுதல்** :

(அ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர், பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டுமாயின் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றிதழுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்களை வெளியிடுவார். பரீட்சார்த்தியொருவர் தமக்கு நிச்சயிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையொப்பம் உறுதிசெய்யப்பட்ட தனது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமையானது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்ததாகக் கருதக்கூடாது. பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சார்த்திகள் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டியேற்படும்.

(ஆ) ***பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.***- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் சகல பரீட்சார்த்திகளும் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

6. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது சம்பந்தமாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

எம். ஐ. எம். ரபீக்,
செயலாளர்,
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார
அலுவல்கள் அமைச்சு.

தேசிய கொள்கைகள் மற்றும்
பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
"மிலோதா" (பழைய ரைம்ஸ் கட்டிடம்),
முதலாம் மாடி, பிரிஸ்டல் வீதி,
கொழும்பு 1,
2016, ஏப்பிறல் 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

*சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2015*

First Efficiency Bar Examination for Entrepreneurship Development Training Officers of the Small Enterprises Development Division of the Ministry of National Policies and Economic Affairs - 2015

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : ☐
சிங்களம்-2/ தமிழ்-3
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

1. பெயர் :

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMANKUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்தை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(இந்த முகவரிக்கே பரீட்சை அனுமதிப்பத்திரம் தபாலில் இடப்படும்.)

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 ஆண்/ பெண் : ☐
பெண்-1, ஆண்டு-0)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

3. பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள் :

1. ...................................................... ☐ பாட இலக்கம்
2. ...................................................... ☐ பாட இலக்கம்
3. ...................................................... ☐ பாட இலக்கம்

4. நீங்கள் எத்தனையாவது தடவை பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்கள் :----.

5. பரீட்சைக் கட்டணம் :

(i) செலுத்திய கட்டணம் : ரூ. :----.
(ii) செலுத்திய அலுவலகம் :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச்சீட்டு இல. :----.

| |
|---|
| வர்த்தமானி அறிவித்தலில் இல. 2(ஊ) பந்திக்கமைய, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் அந்தப் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் அத்தியாவசியமாகும்.) |

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென்று உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் உடன்படுகின்றேன் எனவும் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

***திணைக்களத் தலைவரின் சான்றிதழ்***

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ....... .................................... எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும், அவரால் முன்வைக்கப்பட்டிருக்கும் தகவல்கள் சரியானவை எனவும், குறிப்பிட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமையுடையவர் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். அவர் முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றுபவர் எனவும், குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் என்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்).
திகதி :----.

***(இந்த அறிவித்தலானது 2016.04.29 ஆந் திகதிய "தினகரன்" பத்திரிகையுடன் வெளியாகும் அநுபந்தத்தில் பிரசுரிக்கப்படவுள்ளது.)***

4-846

## கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் நோக்கெல்லையின்கீழ் தொழிற்பட்டு வரும் வர்த்தக திணைக்களத்திற்கு உதவிப் பணிப்பாளர்களை (தரம் III நிறைவேற்றுத்தரச் சேவை) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் நோக்கெல்லையின்கீழ் தொழிற்பட்டு வரும் வர்த்தக திணைக்களத்தில் உதவி வர்த்தகப் பணிப்பாளர் பதவிக்காக இந்த அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கத்தக்கதாக ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தினைக் கொண்டுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வர்த்தக திணைக்களத்துக்கான தரம் III இனைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2016.05.20 ஆகும்.

**குறிப்பு**.- மேற்குறித்த பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பமானது காணாமல் போதல் அல்லது விண்ணப்பம் கிடைப்பதில் ஏற்படும் தாமதம் மற்றும் ஏனைய அது தொடர்பான முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரையில் விண்ணப்பிப்பதில் ஏற்படும் காலதாமதத்தினால் ஏற்படும் இழப்புகளுக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பாவர்.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- விதித்துரைக்கப்பட்ட தகைமைகளினை திருப்திகரமாகக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள், எழுத்துமூலப் பரீட்சை மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளப்படும் அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

2. **பதவி தொடர்பான நியதிகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. நீங்கள், எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படும் ஓய்வூதியத் திட்டத்திற்குள் உள்வாங்கப்படுவீர்கள்.

(ii) அலுவலர்கள் 3 வருட தகுதிகாண் காலப்பகுதியினைக் கொண்டிருப்பதுடன் தகுதிகாண் காலப்பகுதியினுள் முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2014/01 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி சேவையில் இணைந்த 5 வருட காலப்பகுதியினுள் விதித்துரைக்கப்பட்ட அரச கரும மொழி வினைத்திறனைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச கரும மொழி தவிர்ந்த வேறு ஏதேனும் அரச கரும மொழியில் சேவையில் இணைந்துகொண்ட அலுவலர்கள் ஒரு அரச கரும மொழியில் சேவையில் இணைந்த முதல் 3 வருட காலப்பகுதியினுள்ளும் மற்றையதில் 6 வருடங்களினுள்ளும் வினைத்திறன் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நடைமுறை சட்டவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க மற்றும் ஏனைய திணைக்களசார் கட்டளைகளுக்குட்படும்.

(v) அலுவலர்கள் காலத்திற்குக்காலம் வெளிநாடுகளில் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகளினைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- பொது நிருவாக சுற்றறிக்கை இல. 06/ 2006 இன்படி, இந்தப் பதவிக்கு இணைக்கப்பட்டுள்ள மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - எஸ்எல் 1/ 2006 ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.

4.

4.1 ***கல்விசார் தகைமைகள் :***

(i) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனமான பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பொருளாதாரம், வர்த்தகம், வியாபார முகாமைத்துவம், சந்தைப் படுத்தல், புள்ளிவிபரவியல், கணக்கியல் அல்லது பொது நிருவாகம் அல்லது முகாமைத்துவத்தில் விசேட பட்டத்தில் (சிறப்பு) முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனமான பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பொருளாதாரம், வர்த்தகத்தில் சாதாரண பட்டப்படிப்பில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனமாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து சட்டத்துறையில் பட்டப்படிப்பினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

4.2 ***தொழில்சார் தகைமைகள்***.- மேலே 4. (i). (iii) இல் விதித்துரைக்கப்பட்ட கல்விசார் தகைமைகளினைப் பூர்த்திசெய்யும் பரீட்சார்த்திகள் உச்ச நீதிமன்றத்தில் (இலங்கையில்) சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

4.3 ***தொழில்சார் அனுபவம்.***- மேலே 4. (i). (iii) இல் விதித்துரைக்கப்பட்ட கல்விசார் தகைமைகளினைப் பூர்த்திசெய்யும் பரீட்சார்த்திகள் வர்த்தகம் அல்லது சர்வதேச வர்த்தக சட்டத்துறையில் சட்டத்தரணியாக ஆகக்குறைந்தது 3 வருடங்களாவது சேவையாற்றிய அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்ப முடிவுத் திகதியின்போது 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க, 1995.05.20 ஆந் திகதியன்று அல்லது அதன் முன்னரும் 1981.05.20 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னரும் பிறந்த திகதியினையுடைய பரீட்சார்த்திகள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியானவர்களாவர்.)

6. **உடல் ஆரோக்கியம்.**- அனைத்துப் பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பகுதியிலேனும் வெளிநாடுகளிலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கிய நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **ஏனையவை** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நல்லொழுக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்ப முடிவுத் திகதியின்போது பதவிக்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

8. ***எழுத்துமூலப் பரீட்சை*** :

(i) அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2016, யூலை மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும் ;

(ii) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் ;

(iii) பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளில் ஏதேனுமொன்றில் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன் அவ்வாறு தெரிவுசெய்யப்படும் மொழி மூலமாகவே அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(iv) எழுத்துமூலப் பரீட்சையானது பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :

| *விடய தான இல.* | *விடயம்* | *காலம்* | *புள்ளிகள்* | *ஆகக் குறைந்த சித்தி புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 1 மணி | 100 | 40% |
| 02 | பொது வினாத் தாள் (வர்த்தகம் மற்றும் பொருளியல் | 2 மணி | 100 | 40% |
| 03 | ஆங்கிலம் | 2 மணி | 100 | 40% |
| 04 | கட்டுரையும் சுருக்கமும் | 2 மணி | 100 | 40% |

8.2 ***எழுத்துமூலப் பரீட்சைக்குரிய பாடவிதானங்கள் :***

(அ) *நுண்ணறிவுப் பரீட்சை.*- பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான ஆற்றல், பகுப்பாய்வு சிந்தனை மற்றும் தீர்மானம் நிறைவேற்றல் என்பவற்றினைத் தீர்மானிப்பதற்கான பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

(ஆ) *பொது வினாத்தாள் (வர்த்தகம் மற்றும் பொருளியல்).*- பரீட்சார்த்தியின் இலங்கை மற்றும் வெளிநாடுகள் தொடர்பான வர்த்தக மற்றும் பொருளாதார அறிவை பரிசோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

(இ) *ஆங்கிலம்.*- ஆங்கில இலக்கணம், சொல் வளம் மற்றும் ஆங்கில மொழியினைப் புரிந்துகொள்ளுதல் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவினைத் தீர்மானிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும்.

(ஈ) *கட்டுரையும் சுருக்கமும்.*- தரப்படும் ஒன்று அல்லது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கட்டுரை/ கட்டுரைகளினை எழுதுதல் வேண்டும். பாடத்துறையுடன் தொடர்பில்லாத வகையில் விடய தானங்கள் தெரிவுசெய்யப்படும். ஆனால் பரீட்சார்த்தியின் வெளிப்படுத்துகை, கற்பனை வளம், சிந்திக்கும் ஆற்றல், பொது அறிவு மற்றும் மொழித்திறன்கள் என்பன தொடர்பான ஆற்றல் பரிசோதிக்கப்படும். கிரகித்தல் என்பது தரப்படும் பந்தியின் கருத்தினைப் புரிந்துகொள்வதற்கான ஆற்றலினை பரிசோதிப்பதனையும் அதனை விளக்கமாக சுருக்க வடிவில் வெளிப்படுத்துவதனையும் குறிக்கின்றது.

8.2.1 ***நேர்முகப் பரீட்சை :***

(i) வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக பரீட்சார்த்திகள், அனைத்துப் பாடங்களிலும் 40% இற்கும் அதிகமான புள்ளிகளினைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து கூடிய புள்ளியின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

(ii) பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையானது பரீட்சார்த்திகளின் அடிப்படை தகைமைகள் மற்றும் சான்றிதழ்களினை ஆய்வு செய்யும்.

பந்தி 8.2 பெறுபேறுகளை வெளியிடுதல் :

8.2.1 ஆம் பந்திக்கமைவாக, வெற்றிடங்களின் எண்ணிக் கைக்குச் சமமாக (அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு) தெரிவுசெய்யப்பட்ட தகைமை வாய்ந்த பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியலொன்று பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளரிடம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளுக்குமான பெறுபேறுகள் தபாலில் அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தள முகவரியில் வெளியிடப்படும்.

9. **விண்ணப்ப நடைமுறை :**

(i) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். பரீட்சார்த்தி மேற்கூறிய மொழிகளில் ஏதேனுமொன்றில் தோற்ற முடியும் என்பதுடன் அவர் தெரிவுசெய்த மொழியிலேயே அனைத்துப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் எத்தகைய சந்தர்ப்பத்திலேனும் மாற்றியமைப்பதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்தி அனைத்து நான்கு பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும் ;

(ii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். நாடு பூராகவு முள்ள ஏதேனும் தபால் அலுவலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 எனும் வருமானத் தலைப்பில் செலவு வைக்கப்பட்டு அதன் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் முறையாக ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருப்பது அநுகூலமானதாகும்.

**குறிப்பு**.- ஒரு தடவை செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எத்தகைய சந்தர்ப்பத்திலேனும் அல்லது விண்ணப்பத்தினை மீளப்பெறுதல் அல்லது பரீட்சைக்குத் தோற்றாமல் இருத்தல் அல்லது பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் தகைமையிழந்தமை கண்டுபிடிக்கப்பட்டமை போன்ற காரணங்களினால் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மீளளிக்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சையானது கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சைத் திகதியானது பின்னர் அறிவிக்கப்படும்.

(iv) முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிக்கு எவ்வித அறிவித்தலும் வழங்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளினையும் விண்ணப்பதாரி கொண்டுள்ளார் என்பதாகாது.

(v) விண்ணப்பமானது தரப்பட்ட மாதிரிக்கமைவாக ஏ4 தாளினைப் பயன்படுத்தி பிரிவு 1 இலிருந்து 8 வரையிலான பகுதிகள் முதல் பக்கத்திலும் மீதிப் பகுதிகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் பக்கங்களிலும் அமையக்கூடியதாக தயாரிக்கப்படுதல் வேண்டும். எல்லாப் பதிவுகளும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தலையங்கத்திலுள்ள பரீட்சையின் பெயரானது சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான விண்ணப்பங்களில் மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத அனைத்து விண்ணப்பங்களும் முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படாது நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருப்பது உபயோகமானது.

(vi) குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு விடயத்தினையும் கொண்டிருக்காத விண்ணப்பம் நிராகரிப்பதற்கு ஏதுவாகும். தபாலில் ஏற்படும் தாமதம் அல்லது தொலைந்துபோதல் போன்ற முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(vii) பரீட்சார்த்தி தோற்றவிருக்கின்ற மொழி மூலத்திலேயே விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

(viii) பூரணப்படுத்திய விண்ணப்பங்கள், ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு 2016, மே மாதம் 20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. "வர்த்தக திணைக்களத்திற்கான உதவிப் பணிப்பாளர்கள் (நிறைவேற்றுத் தரம்) தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை'' என விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ix) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப் படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிக்கப்படும். அத்தகைய பத்திரிகை விளம்பரம் குறித்து அவதானமாக இருக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

